செய்தி வெளியீடு எண். 275 நாள்: 02.08.2021

**பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத்துறை சார்பாக, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் கொரோனா பெருந்தொற்று (கோவிட்-19) தடுப்பு விழிப்புணர்வு சிறப்பு முகாம் நடைபெற்றது**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத்துறை சார்பாக, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் கொரோனா பெருந்தொற்று (கோவிட்-19) தடுப்பு விழிப்புணர்வு சிறப்பு முகாம் இன்று (02.08.2021) நடைபெற்றது.

முன்னதாக, திருவள்ளூர் பேருந்து நிலையத்தில், பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகள், கடை வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு முககவசம் அணிந்து, சமூக இடைவெளியை கடைபிடிப்பது தொடர்பான துண்டு பிரசுரங்களையும், முககவசங்களையும் வழங்கி, விழிப்புணர்வு ஏற்படுத்தியும், திருவள்ளூர் பஜார் விதியில், கடை வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு முககவசம் அணிந்து, சமூக இடைவெளியை கடைபிடிப்பது தொடர்பான துண்டு பிரசுரங்களையும், முககவசங்கள் ஆகியவற்றை வழங்கியும், திருவள்ளூர் ஜே.என்.சாலையில் உள்ள ஐ.ஆர்.என். திருமண மண்டபத்தில், கொரோனா தொற்று தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழியினை அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு, கை அலம்பும் செயல்முறையினை பார்வையிட்டு, செய்து காண்பித்தும், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய செயல்பாடுகளால் கொரோனா 2-வது அலை ஒன்றரை மாதத்திற்குள்ளாக கட்டுக்குள் கொண்டு வந்து, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு சிறப்பாக செயலாற்றினார்கள். இதனை பிற மாநில முதல்வர்களும், ஆராய்ச்சியாளர்களும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பாராட்டி, சிறந்த முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தற்பொழுது கொரோனா 3-வது அலையை தடுப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த மே மாதத்தில் 1235 என்று இருந்த கொரோனா தொற்று, மேலும், அந்த மாதத்திலேயே 14500 – 18400–ஆக உச்சம் அடைந்தது. ஆனால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சா அவர்களின் சீரிய நடவடிக்கைகளால் அனைத்து மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித்

தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மருத்துவத்துறையினர், காவல்துறையினர் என அனைத்து அரசு துறைகளும் ஒட்டுமொத்தமாக செயல்படுத்தி முழு ஊரடங்கை அமல்படுத்தி, கொரோனா தொற்று குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. கொரோனா 3-வது அலை தற்பொழுது மாவட்டத்தில் ஒரு நாளைக்கு 65 நபர்களுக்கு தொற்று என்ற அளவில் உள்ளது. நேற்றைய தினம் வரை 95 நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் முககவசங்களை அணியவும், சமூக இடைவெளியினை கடைபிடிக்கவும், கைகளை சோப்பினால் சுத்தம் செய்யவும், கொரோனா தடுப்பூசிகளை போட்டுக்கொள்ளவும், மாநிலத்தில் அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள், முககவசங்கள் வழங்கி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. 01.08.2021 முதல் 07.08.2021 வரை மாநகராட்சி முதல் குக்கிராமங்கள் வரை கொரோனா விழிப்புணர்வு சிறப்பு முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு நடத்தப்படுகிறது. கொரோனா தொற்றின் 3-வது அலையினை எதிர்கொள்வதற்கு தமிழ்நாடு அரசு தயார் நிலையில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் என மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்நிகழ்ச்சிகளில், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.ஜி.ராஜேந்திரன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.ஜவஹர்லால், திருவள்ளூர் அரசு மருத்துவமனை (ம) மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.அரசி ஸ்ரீவத்சன், திருவள்ளூர் நகராட்சி ஆணையர் திரு.சந்தானம் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**